**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

**திருவிருந்து ஞாயிறு ஆராதனை / *Holy Communion Sunday***
***7st ஜூன் / June 2026***

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திரு. சாம் ஜோசப் சுரேஷ்**<br>Mr. Sam Joseph Suresh |
| **மௌன தியானம்**<br>Silent Meditation | |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திரு. சாம் ஜோசப் சுரேஷ்**<br>Mr. Sam Joseph Suresh |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**நல் மீட்பர் பட்சம் நில்லும்**

*1. நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*ரட்சணிய வீரரே!*
*ராஜாவின் கொடியேற்றி*
*போராட்டம் செய்யுமே!*
*சேனாதிபதி இயேசு*
*மாற்றாரை மேற்கொள்வார்*
*பின் வெற்றி கிரீடம் சூடி*
*செங்கோலும் ஓச்சுவார்.*

*2. நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*எக்காளம் ஊதுங்கால்,*
*போர்க்கோலத்தோடு சென்று*
*மெய் விசுவாசத்தால்*
*அஞ்சாமல் ஆண்மையோடே*
*போராடி வாருமேன்;*
*பிசாசின் திரள்சேனை*
*நீர் வீழ்த்தி வெல்லுமேன்.*

*3. நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*எவ்வீர சூரமும்*
*நம்பாமல், திவ்விய சக்தி*
*பெற்றே பிரயோகியும்;*
*சர்வாயுதத்தை ஈயும்*
*கர்த்தாவை சாருவீர்*
*எம்மோசமும் பாராமல்*
*முன் தண்டில் செல்லுவீர்.*

*4. நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*போராட்டம் ஓயுமே;*
*வெம்போரின் கோஷ்டம்,*
*வெற்றி*
*பாட்டாக மாறுமே1*
*மேற்கொள்ளும் வீரர் ஜீவ*
*பொற் கிரீடம் சூடுவார்;*
*விண் லோக நாதரோடே*
*வீற்றரசாளுவார்.*

| | |
|---|---|
| ✝ **பொதுவான பாவ அறிக்கை**<br>Prayer of Confession | **சபையார் இணைந்து**<br>Congregation |

சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, தப்பிப்போன ஆடுகளைப் போல நாங்கள் உம்முடைய வழிகளை விட்டு வழுவி அலைந்து போனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாய் குற்றஞ் செய்தோம். செய்யத் தக்கவைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவைகளைச் செய்து வந்தோம். எங்களுக்குச் சுகமே இல்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மனிதருக்கு அருளிச்செய்த வாக்குத் தத்தங்களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமை உண்டாகும்படி, நாங்கள் இனித் தேவபக்தியும் நீதியும் தெளிந்த புத்தியும் உள்ளவர்களாய் நடந்து வர, இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் எங்களுக்குக் கிருபை செய்தருளும். **ஆமென்.**

| | |
|---|---|
| ✝ **அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணம் (பாடலாக) (திரையில்)**<br>The Apostle's Creed | **சபையார் இணைந்து**<br>Congregation |

உலகும் வானும் செய்தாளும் ஒப்பில் சர்வ வல்லவராய்
இலகு மருளாம் தந்தையாம் எம்பிரான்றனை நம்புகிறேன்.

அவரொரு பேறாமைந்தனுமாய் ஆதிமுதலெங் கர்த்தனுமாய்
தவறிலேசுகிறிஸ்துவையும் சந்ததமே யான் நம்புகிறேன்.

பரிசுத்தாவி அருளதனால் படிமேல் கன்னிமரியிடமாய்
உருவாய் நரர் அவதாரமாய் உதித்தாரெனவும் நம்புகிறேன்.

பொந்து பிலாத்ததிபதி நாளில் புகலரு பாடுகளையேற்றி
உந்துந் சிலுவையறையுண்டு உயிர்விட்டாரென நம்புகிறேன்.

இறந்தே அடங்கிப்பாதாளம் இறங்கி மூன்றாந் தினமதிலே
இறந்தோரிட நின்றே உயிரோ டெழுந் தாரெனவும் நம்புகிறேன்.

சந்ததமோட்சம் எழுந்தருளிச் சருவ வல்ல பரனான
எந்தை தன்வல பாரிசமேயிருக்கின்றாரென நம்புகிறேன்.

உயிருள்ளோரை மரித்தோரை உத்தமஞாயந் தீர்த்திடவே
ஜெயமாய்த் திரும்ப வருவாரெனச் சிந்தையார நம்புகிறேன்.

*பரிசுத்தாவியை நம்புகிறேன் பரிசுத்தமாபொதுச் சபையும்*
*பரிசுத்தர்களின் ஐக்கியமும் பரிவாயுண்டென நம்புகிறேன்*

*பாவ மன்னிப்புளதெனவும் மரித்தோருயிர்தெழு வாரெனவும்*
*ஓவா நித்ய ஜீவனுமே உளதெனவும் யான் நம்புகிறேன்.* **ஆமென்…..**

## இறையாசனத்தண்டை வருகை / *APPROACHING GOD'S THRONE*

**சிறுவர் / வாலிபருக்கான ஜெபம்**
Prayer for Children & Youth

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**கர்த்தருடைய ஜெபம் (பாடலாக) (திரையில்)** — **சபையார் இணைந்து**
Lord's prayer (On screen) — Congregation

**பரமண்டலங்களில் வீற்றிருக்கும்**

*பரமண்டலங்களில் வீற்றிருக்கும்*
*பரம பிதாவே எந்நாளும்*
*பரிசுத்தப்படுக உம் நாமம்*
*பரிவுடன் வருக உம் ராஜ்யம்.*

*பரலோகத்தில் உமது சித்தம்*
*பண்புடன் செய்ய படுவதுபோல்*
*தரணியில் உமது சித்தமுமே*
*தவறாது செய்ய படுக சதா.*

*அன்றன்றுள்ள எம் ஆகாரம்*
*அன்புடன் எங்களுக்கீந்தருளும்*
*நன்றயனார் கடன் யாவும்*
*மன்னியும்.*
*நன்னயம் போல் எம் பிழை*
*மன்னியும்.*

*தேவே சோதனை கெமை விலக்கி*
*தீமையினின்றெம்மை*
*இரட்சியுமே*
*மேவும் ராஜ்யம் வல்லமை*
*மகிமை*
*மிகவும் உமதென்றுமே*
*ஆமேன்…*

**ஞானஸ்நானம்**
Baptism

## இறைவனுக்கு அளித்தல் / *GIVING TO GOD*

**காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

**நித்தம் முயல் மனமே**

**நித்தம் முயல் மனமே! பரி**
**சுத்த ஜீவியத்தில் மெத்த வளர நீ**

*1. அத்தன் யேசுவினில் பத்தியாய் அமர்ந்து*

*சத்திய வேதத்தால் நித்தம் உன்னைப் போஷி*

*2. அல்பகல் யேசுவோ டதிக நேரத்தை*
*ஆசையாய்க் கழி நீ, அவரைப்போலாவாய்.*

*3. தேவன்றன் பிள்ளைகள் யாவரையும் நேசி,*
*ஆவலாய் எளியோர்க் கன்பாலுதவி செய்.*

*4. யேசுவே உன்றனை என்றும் நடத்துவார்;*
*இன்ப துன்பத்திலும் அன்பாய் நீ பின்செல்லு.*

*5. எந்த எண்ணத்தையும் யேசுவின் கீழ் ஆக்கி,*
*உன்றன் உள்ளத்தில் அமர்ந்திரு சாந்தமாய்.*

*6. மேவும் அன்பினுக்குள் தேவாவி நடத்த*
*மேலான வாழ்வுக்குத் தக்கவனாகுவாய்.*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

## இறை வார்த்தைக்கு செவிமடுத்தல் / *LISTENING TO GOD'S WORD*

✝ **திருமறைப் பாடம்** — **திருமதி பாலின்**
Scripture Reading — Mrs. Paulin
***எஸ்தர் 4 : 5 – 14***
Esther 4 : 5 – 14

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

✝ **ஆயத்தப் பாடல்** — **சபையார் இணைந்து**
Preparatory Song — Congregation

**வீராதி வீரர் யேசு சேனை நாங்கள்**

*1. வீராதி வீரர் யேசு சேனை நாங்கள்,*
*சேனை நாங்கள்; யேசுவின் சேனை நாங்கள்.*

*2. திரு வசனத்தை எங்கும் திரிந்து சொல்வோம்,*
*திரிந்து சொல்வோம்; அதை அறிந்து சொல்வோம்.*

*3. அறிவீன மென்னும் காட்டை அதமாக்குவோம்,*
*அதமாக்குவோம்; ஞானமதால் தாக்குவோம்.*

*4. சிலுவைக் கொடியைச் சேரத் தேடிப் பிடிப்போம்.*
*தேடிப் பிடிப்போம்: அன்பு கூர்ந்து பிடிப்போம்.*

*5. ரட்சணிய சீராவுடன் நீதிக் கவசம்,*

*நீதிக் கவசம்; கையாடுவோம் வசம்.*

*6. விசுவாசக் கேடகத்தை மேலுயர்த்துவோம்.*
*மேலுயர்த்துவோம்; அதை மேலுயர்த்துவோம்.*

*7. பாவச் சோதனைத் தடைகள் பாசம் நீக்குவோம்.*
*பாசம் நீக்குவோம்; ஆசாபாசம் போக்குவோம்.*

***திருவிருந்து ஆராதனை முறைமை***
Order of Holy Communion

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***<u>மனப்பாட வசனங்கள்</u>*** — ***சபையார் இணைந்து***
<u>Memory Verses</u> — Congregation

***எஸ்தர் 4 : 14***
Esther 4 : 14

***24. நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச்சொன்னான்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***
Closing Prayer & Benediction

✝ ***ஆசீர்வாதப் பாடல்*** — ***சபையார் இணைந்து***
Benediction Song — Congregation

✝ ***சபையார் நிற்கவும் / Indicates Congregation standing***